பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 06 2024 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கான இறுதிக்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு 57 தொகுதிகளில் சற்றுமுன் தொடங்கியது.
- நாட்டில் எட்டு முக்கிய துறைகளின் உற்பத்தி 6 புள்ளி இரண்டு சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- நாட்டின் மத்திய மற்றும் வடமேற்குப்பகுதியில் தொடர்ந்து வெப்ப அலை வீசி வருகிறது.
- கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டம் வியன்னாவில் இன்று நடைபெறுகிறது.
- போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

மக்களவைக்கான இறுதிக்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு சற்றுமுன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

ஏழு மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட 57 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெறுகிறது.

பெரும்பாலான தொகுதிகளில் வாக்குப்பதிவு மாலை ஆறு மணிக்கு நிறைவடைகிறது.

குறிப்பிட்ட சில தொகுதிகளில் வாக்குப்பதிவு முன்கூட்டியே நிறைவடையும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இன்றைய வாக்குப்பதிவுக்காக, ஒரு லட்சத்து 9 ஆயிரம் வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய தேர்தலில், 10 கோடியே 6 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவையொட்டி, வாக்குச்சாவடிகளில் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெயிலின் தாக்கத்தை கருத்தில்கொண்டு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இன்று நடைபெற்றுவரும் இறுதிக்கட்டத் தேர்தலில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு அனுராக் தாக்கூர், திரு ரவிசங்கர் பிரசாத், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு மனிஷ் திவாரி, திரு விக்ரமாதித்ய சிங், ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியின் மிஸா பாரதி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் அபிஷேக் பானர்ஜி உட்பட பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக கடந்த ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, தேர்தல் நடைபெற்று வருகிறது.

ஏற்கனவே ஆறு கட்டங்களாக 486 தொகுதிகளில் வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது.

மக்களவை இறுதிக்கட்ட தேர்தலுடன், ஒடிஷா சட்டப்பேரவைக்கு நான்காவது மற்றும் இறுதிக்கட்டமாக 42 தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

மக்களவை மற்றும் ஆந்திரா, ஒடிஷா சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4-ஆம் தேதி எண்ணப்படும்.

சிக்கிம் மற்றும் அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் மட்டும் நாளை எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

<<<<<>>>>>>

நாட்டில் எட்டு முக்கிய துறைகளின் உற்பத்தி 6 புள்ளி இரண்டு சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மின்சாரம், இயற்கை எரிவாயு, நிலக்கரி, எஃகு, சிமெண்ட், உள்ளிட்ட துறைகளின் உற்பத்தி குறியீடு தொடர்ந்து அதிகரித்து வருவதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எஃகு உற்பத்தி முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏழு புள்ளி ஒரு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மின் உற்பத்தி ஒன்பது புள்ளி நான்கு சதவீதமும், இயற்கை எரிவாயு உற்பத்தி எட்டு புள்ளி ஆறு சதவீதமும் அதிகரித்துள்ளதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த நிதியாண்டில் எட்டு புள்ளி இரண்டு சதவீதமாக அதிகரித்துள்ளது என்று புள்ளியில் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில் இது ஏழு சதவீதமாக இருந்தது என அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு உள்நாட்டு உற்பத்தி சிறப்பாக அமைந்ததே காரணம் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார மதிப்பு மூன்று புள்ளி ஐந்து ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது என்றும், அடுத்த ஐந்தாண்டுகளில் இது ஐந்து ட்ரில்லியனை எட்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சி குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

முக்கிய கனிமங்களின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக சுரங்க அமைச்சகம் கூறியுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் அலுமினியம் மற்றும் இரும்புத்தாது உற்பத்தி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அலுமினிய உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடம் வகிப்பதாகவும், இரும்புத்தாது உற்பத்தியில் நான்காவது இடத்தில் உள்ளதாகவும் சுரங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

நாக்பூரில் அதிகபட்ச வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸை தாண்டியதாக வெளியான தகவல் தவறானது என்று மத்திய புவி அறிவியல் அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

மின்னணு சென்சார் பழுதால் தவறாக வெப்பநிலை பதிவானது என்றும் அதை சரி செய்ய வானிலை ஆய்வு மையம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டின் மத்திய மற்றும் வடமேற்குப்பகுதியில் தொடர்ந்து வெப்ப அலை வீசி வருகிறது.

பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், தில்லி, உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம், ஒடிஷா, ஜார்கண்ட் உள்ளிட்ட பகுதிகளில் இன்றும் வெப்ப அலை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் வெப்பத்தின் தாக்கம் மூன்று முதல் நான்கு டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையும் என்று வானிலை ஆய்வு மைய விஞ்ஞானி டாக்டர் ஜெனமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களில் சில இடங்களில் கனமழை தொடர்ந்து நீடிக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

அசாமில், வெள்ள நிலைமை தொடர்ந்து மோசமாக உள்ளது.

ரெமல் புயலால் ஏற்பட்ட கனமழையைத் தொடர்ந்து முக்கிய நதிகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. வெள்ளத்தால் 11 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மூன்றரை லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோபிலி, பராக், கடக்கல், குஷியாரா ஆகிய நதிகளில், தண்ணீர் அபாய கட்டத்தை தாண்டி ஓடுகிறது.

மாநிலம் முழுவதும் 4900 ஹெக்டேர் பயிர் பகுதிகள் சேதமடைந்துள்ளன. கச்சாரில் 3 பேரும், ஹைலகண்டியில் 2 பேரும், மேற்கு கர்பி அங்லாங் மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

கச்சார், கரீம்கஞ்ச் மற்றும் நாகான் மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 148 நிவாரண முகாம்களையும், 39 நிவாரணப் பொருட்கள் விநியோக மையங்களையும் மாநில அரசு திறந்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் நிவாரணப் படையினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

மணிப்பூரில், கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுகிறது. தலைநகர் இம்பாலின் சில பகுதிகள் இன்னும் நீரால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேசிய பேரிடர் மீட்பு படை உள்ளிட்ட அரசுத் துறைகள் தொடர்ந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

<<<<<>>>>>>

கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டம் வியன்னாவில் இன்று நடைபெறுகிறது.

தற்போதைய சந்தை நிலவரம் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது.

ஒபெக் அமைப்பில் இடம்பெற்றுள்ள உறுப்பு நாடுகள் இதில் பங்கேற்கவுள்ளன.

ஒபெக் அமைப்பில் இடம்பெறாத கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அமைச்சர்கள் இடையிலான கூட்டமும் இன்று நடைபெறுகிறது.

<<<<<>>>>>>

காஸாவில் மோதலை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் தெரிவித்துள்ள புதிய யோசனைகளை ஏற்குமாறு அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் ஹமாஸ் அமைப்பை வலியுறுத்தியுள்ளார்.

மூன்று பகுதிகளைக் கொண்ட இந்த புதிய முன்மொழிவின்படி காசாவில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் வெளியேறும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மனிதாபிமான உதவிகள் அதிகரிப்பதுடன் காசாவில் மறுசீரமைப்பு திட்டமும் சாத்தியமாகும் என அவர் தெரிவித்துள்ளார். மோதலை முடிவுக்கு கொண்டு வர சிறந்த வழி இது என்று அவர் கூறினார்.

<<<<<>>>>>>

செங்கடலில் உள்ள அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இருப்பதாக ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.

ஏமனின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஹவுத்தி நிலைகள் மீது அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதல்களுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹவுத்தி தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த நிலைகள் மீது அமெரிக்கா-பிரிட்டன் கூட்டுப் படை நடத்திய தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் உட்பட 41 பேர் காயமடைந்தனர்.

<<<<<>>>>>>

தென்னாப்பிரிக்காவில் புதன்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

90 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் அங்கு யாரக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அங்கு கூட்டணி அரசு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெறும் 41 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. ஜனநாயக கூட்டணி 21 சதவீத வாக்குகளையும், முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமாவின் எம்.கே கட்சி 13 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற தேர்தல்களில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பெரும்பான்மை பெற்று வந்துள்ளது.

<<<<<>>>>>>

ரோஹிங்கியா குழுவினரோ அல்லது மியான்மர் நாட்டினரோ இனி பங்களாதேஷிற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் திரு அசாதுஸ்மான் கான் தெரிவித்துள்ளார்.

காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள உகியா ரோஹிங்கியா முகாமுக்குச் சென்று பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பங்களாதேஷில் போதைப்பொருள் புழக்கம் இல்லை என்றும் ஆனால் மியான்மரில் இருந்து போதைப்பொருட்கள் வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 7-6, 6-0 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Destanee Aiava –**வை வென்றார்.

<<<<<>>>>>>

ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதி சுற்றுப்போட்டியில் இந்தியாவின் **Sachin** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், பிரான்சின் **Samuel –**ஐ வென்றார்.

ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Amit Panghal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தை சுற்று ஆட்டத்தில் அவர், கொரியாவின் **Kim In Kyu –**ஐ வென்றார்.

<<<<<>>>>>>